அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட செங்குந்தர் உயர்நிலைப் பள்ளியில் ரூ.25 லட்சம் மதிப்பிலான புதிய கட்டிட அறை, ஆய்வக அறையினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்,எஸ்.ஆர்.ராமச்சந்திரன் திறந்து வைத்தார். உடன் முன்னாள் சேர்மன் சுப்பாராஜா, சிவப்பிரகாசம், நகர மன்ற தலைவர் சுந்தர் லட்சுமி, நகரச் செயலாளர் ஏ.கே.மணி, மாநில நெசவாளர் அணி பழனிச்சாமி ஆகியோர் உடன் உள்ளனர்.

இன்று (24 ந்தேதி) முதல்வர் நெல்லை வருகை!

நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் உற்சாக வரவேற்பு!

நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் வேண்டுகோள்!

நெல்லை, பிப். 24 –

நெல்லைக்கு இன்று (24.02.26 – செவ்வாய்க் கிழமை) வருகை தரும் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு காலை 10.00 மணி அளவில் கே.டி.சி நகர் பாலம் அருகே நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும்.என நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் முக்கிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது.

நாள்தோறும் தன் திட்டங்களால் தமிழ்நாட்டு மக்களின் வாழ்வில் உயர்வினை ஏற்படுத்தி,வருகின்ற நம் முதலமைச்சர் கழகத்தலைவர் அன்புத்தளபதியார் அவர்கள் சுற்றி சுழலும் சூரியனாக, ஓய்வுக்கே ஓய்வு கொடுத்து, உழைப்பு! உழைப்பு! உழைப்பு !என தன்னகத்தே கொண்டு தமிழ்நாட்டு மக்களின் வாழ்வு மலர நாளும் பொழுதும் அரும் பாடுபட்டு வருகின்றார்கள்.

ஐந்து ஆண்டுகளை நிறைவு செய்து,50 ஆண்டுகளுக்கான திட்டங்களை தந்த நம் முதல்வர் அவர்கள் வரும் தேர்தலில் அவர் பின்னால் "ஓரணியில் தமிழ்நாடு நாம் அனைவரும் "வெல்வோம் ஒன்றாக என தாரக மந்திரத்தை கொண்டு இதுவரை தமிழ்நாட்டில் எவரும் பெறாத இமாலய வெற்றியை நம் கழகத்தலைவர் அன்புத் தளபதியார் அவர்கள் வருகின்ற தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று திராவிட மாடல் 2.0 ஆட்சியினை அமைக்க உள்ளார்கள்.

இவ்வாறு சிறப்பு மிக்க நம் முதலமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக, கன்னியாகுமரி செல்ல உள்ள நம் தலைவர் அவர்களுக்கு இன்று (24.02.2026) காலை 10.00 மணி அளவில் திருநெல்வேலி கே.டி.சி நகர் பாலம் அருகில் நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க சார்பில் வரவேற்பு அளிக்கும் வகையில்,திருநெல்வேலி மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகி கள், மாநில அணி நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் சார்பு அணிகளின் மாவட்ட ஒன்றிய,நகர, பேரூர், கிளை, வார்டு அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் கழகத்தோழர்கள் ஆகியோர் திரளாக பங்கேற்று திராவிட மாடல் முதலமைச்சருக்கு வரவேற்பு அளிக்க வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

பல்வேறு அரசு திட்டங்களை துவக்கி வைக்க வருகை தரும்

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் உற்சாக வரவேற்பு!

மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் அறிக்கை!

நெல்லை, பிப். 24 –

இன்று 24 ந்தேதி நெல்லைக்கு வருகை தரும் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்க வேண்டும்.என நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. அறிக்கை விடுத் துள்ளார்.

அதில் அவர் கூறியி ருப்பதாவது.

இன்று (24.02.2026 செவ்வாய் கிழமை) கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு அரசு திட்டங்களை

துவக்கி வைக்கும் விழாவில் கலந்து கொள்வதற்காக முதலமைச்சர், நமது நெஞ்சம் நிறைந்த தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,

தூத்துக்குடி விமான நிலையம் வந்து இறங்கி,கன்னியாகுமரி செல்லும் வழியில்,கே.டி.சி.நகர் ரவுண்டானா அருகில்,காலை 9.00 மணியளவில் நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க.சார்பில் மாபெரும் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட இருக்கிறது.

ஆகவே நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள்,மாநகர,பகுதி கழக நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள்,உள்ளாட்சி பிரதிநிதி கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BDA, BLC உள்ளிட்ட பாக முகவர்கள்,கழக உடன் பிறப்புகள் அனைவரும் முத்தான முதல்வரை முகமலர்ச்சியுடன் வரவேற்க வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

நெல்லைக்கு வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் உற்சாக வரவேற்பு!

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் அறிக்கை!

நெல்லை, பிப். 24 -

இன்று 24 ந்தேதி நெல்லைக்கு வருகை தரும் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு நெல்லை கிழக்கு மாவட்டம் பணகுடியில் உற்சாகமான வரவேற்பு அளிக்க வேண்டும் என நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது.

இன்று (24.02.2026 செவ்வாய்க்கிழமை) கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு அரசு திட்டங்களை துவக்கி வைக்கும் விழாவில் கலந்து கொள்வதற்காக முதலமைச்சர்,நமது நெஞ்சம் நிறைந்த தலைவர் அன்புத் தளபதியார் அவர்கள், தூத்துக்குடி விமான நிலையம் வந்து இறங்கி,கன்னியாகுமரி செல்லும் வழியில்,நெல்லை கிழக்கு மாவட்டம் பணகுடியில் காலை 10.00 மணியளவில் நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் சிறப்பான வரவேற்பு

வழங்கப்பட இருக்கிறது.

ஆகவே நெல்லை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாநகர,பகுதி கழக நிர்வாகிகள்,ஒன்றிய,பேரூர் கழக நிர்வாகிகள், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BDA, BLC உள்ளிட்ட பாக முகவர்கள், கழக உடன் பிறப்புகள் அனைவரும் முத்தான முதல்வரை முகமலர்ச்சியுடன் வரவேற்க வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

குமரி மாவட்டத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை!

மீனவர்கள் பெருமளவில் திரண்டு வரவேற்க வாரீர்!

மீனவர் நல வாரியத் தலைவர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

குமரி, பிப். 24 -

கழக மீனவர் அணி செயலாளர் - தமிழ்நாடு மீனவர் நல வாரிய தலைவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழக மீனவர் அணி செயலாளரும், தமிழ்நாடு மீனவர் நல வாரியத் தலைவருமான ஜோசப் ஸ்டா லின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்ப தாவது. திராவிட மாடல் நல்லாட்சியின் மூலம் ஒட்டு மொத்த தமிழகத்தின் வளர்ச்சியிலும் அசுர பாய்ச்சல் நிகழ்த்தியிருக்கும் கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் குமரி மாவட்ட த்திற்கு வரும் 24 மற்றும் 25 ஆம் தேதிகளில் வருகை தர உள்ளார்.

ஏற்கனவே கழகத் தலைவரின் பொற்கால ஆட்சியில் குமரி மாவட்டத்தில் மீன்வளத் துறைக்கு 1000 கோடி

ரூபாய்க்கும் அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டு திட்டங்களாக வந்துள்ளன. மீனவ கிராமங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்துக் வகையில் தூண்டில் வளைவுகள், கடலரிப்பு தடுப்புச் சுவர், பேரிடர் கால தொலைதொடர்பு கருவிகள் போன்றவற்றிற்கு அதிக நிதி கழக ஆட்சியில் ஒதுக்கப்பட்டு, மீனவர்களின் பாதுகாப்பான வாழ்வியல் உத்தரவாதப்படுத்தப்பட்டு உள்ளது. இதேபோல் மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்கியது. மீன்பிடி குறைகால நிவாரணத் தொகையை உயர்த்தியது என ஏராளமான மீனவர் நலன் நாடும் திட்டங்களைத் தந்தவர் நம் முதல்வர் அவர்கள். அந்தவகையில் கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் இப்போது குமரி மாவட்டத்திற்கு வரும்போதும் வாணியக்குடி மீனவ கிராமத்தில், புதிய மீன்பிடித் துறைமுகம் கட்ட முதல்கட்டமாக 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து பணிகளை துவக்கி வைக்க உள்ளார். இதேபோல், குளச்சல் துறைமுக விரிவாக்கப் பணிகளுக்கு முதல்கட்டமாக 150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அதற்கான பணிகளையும் தொடக்கி வைக்க உள்ளார்.

குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மீனவர்கள் 350 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவது உட்பட ஏராளமான மீனவர் நலன் நாடும் திட்டங்களை குமரிமாவட்ட மீனவ மக்களுக்கு தந்து, அவற்றைத் தொடக்கி வைக்க வருகை தரும் கழகத் தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்துகொள்ளும் இந்த அரசு நிகழ்ச்சிகளில் கழக மீனவர் அணி நிர்வாகிகள், மீனவர் நலவாரிய உறுப்பினர்கள், மீனவ மக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பெருந்திரளாகக் கலந்துகொள்ள வேண்டும்."இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தேனி வடக்கு மாவட்டம் வீரபாண்டி அருகே உள்ள ஜங்கால்பட்டி கிராமத்தில் 'தமிழ்நாடு தலை குனியாது!' என்ற தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில் தேனி வடக்கு ஒன்றிய கழகச் செயலாளரும் முன்னாள் தேனி ஒன்றிய குழு தலைவருமான சக்கரவர்த்தி தலைமையில் நடைபெற்றது. முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம், தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்கள்.இந்நிகழ்ச்சியில் போடி முன்னாள் எம்.எல்.ஏ. லட்சுமணன் போடி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் நேரு பாண்டியன், மாவட்ட அவைத்தலைவர் பி.டி.செல்ல பாண்டியன் உள்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். தேனி வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் முருகஜெகதீசன் நன்றியுரை ஆற்றினார்.

குமரி மாவட்டம் குளச்சல் தொகுதி முட்டம் பகுதி மீனவர்களிடம் தமிழ்நாடு மீனவர் நல வாரியத் தலைவர் அ.ஜோசப் ஸ்டாலின் கோரிக்கை மனுக்களைப் பெற்று அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

முதல்வரின் 'திராவிட மாடல்' ஆட்சியில்

குமரி மாவட்ட மீனவர்களுக்கு ரூ.1000 கோடியில் திட்டங்கள்!

மீனவர் நலவாரியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தகவல்!

குமரி, பிப். 24 -

கடல் மற்றும் உள் நாட்டு மீனவர்களின் கோரிக்கைகளைக் கேட்டு, அவற்றை விரைவில் நிறைவேற்றித்தர கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இதற்கென கழக மீனவர் அணி செயலாளரும், தமிழ்நாடு மீனவர் நலவாரியத் தலைவருமான ஜோசப் ஸ்டாலின் தலைமையில் தமிழகம் முழுவதும் சிறப்பு முகாம்கள் நடைபெற்றுவருகிறது.

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முட்டம் பகுதியில் ஜேப்பியார் திருமண மண்டபத்தில் முதற்கட்ட முகாம் நடைபெற்றது. இதில் பங்கு தந்தைகள், மீனவர் சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு மீனவர்கள் சார்பில் கோரிக்கைகளை எழுப்பினர்.

அவர்கள் எழுப்பிய கோரிக்கை விபரங்கள் வருமாறு...

பங்குதந்தை, கன்னியாகுமரி: கன்னியாகுமரி கடற்கரை பகுதியில் உள்ள விடுதிகளின் கழிவுநீர் கடலில் சேராதவாறு கழிவுநீர் சுத்திகரிப்புத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும். இதேபோல் கன்னியாகுமரி, பெரியநாயகி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தூண்டில் வளைவினை நீட்டிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

பங்குதந்தை, கடியப்பட்டணம்: கீழ கடியப்பட்டணம்_மேல கடியப்பட்டணம்தூண்டில் வளைவுப் பணியை விரைந்து முடிக்க வேண்டும். மேலும் அதை நீட்டித்து வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தார். பங்குதந்தை இனையம்: குமரி மாவட்டத்தில் கடல் தொழிலின்போது காணாமல் போகும் மீனவரை விரைந்து மீட்க ஹெலிகாப்டர் தளம் அமைக்க வேண்டும். மீனவர்கள் கடலில் காணாமல் போனதாக சான்றிதழ் வழங்க 7 ஆண்டுகள் என்று இப்போது இருக்கும் கால அளவைக் குறைக்க வேண்டும். தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தின் மூலம் கடல் தொழிலின்போது விபத்தினால் மரணமடையும் மீனவருக்கு வழங்கப்படும் உதவித் தொகை 2 லட்சம் ரூபாயை உயர்த்தி வழங்க வேண்டும். ஒன்றிய அரசின் திட்டமான ஹைட்ரோகார்பன், சரக்குப் பெட்டக துறைமுகத்தை குமரியில் செயல்படுத்தக் கூடாது. குமரியில் புற்று நோய் ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

கடலோர அமைதி மற்றும் வளர்ச்சிக் குழுவின் இயக்குநர்

கடல் ஆம்புலன்ஸ் வசதி, ஆபத்துக் காலங்களில் மீனவர்களை மீட்டெடுக்க அதிவேக இயந்திரம் பொருத்தப்பட்ட விசைப் படகு வசதி தேவை. மீனவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும். கடலில் மாரடைப்பால் இறக்கும் மீனவர்களை விபத்து மரணம் எனக்கருதி விபத்து காப்பீடு வழங்க வேண்டும். ஆழ்கடல் மீனவர்களுக்கு அதிநவீன கருவிகள் வழங்க வேண்டும். வாணியக்குடியில் புதிய மீன்பிடித் துறைமுகம் அமைக்க வேண்டும். விசைப்படகினை பதிவு செய்ய அதிகபட்ச நீளம் 24 மீ என்பதை நீட்டித்து வழங்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

பங்குதந்தை, முட்டம்: சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளுக்கான பட்டா விரைவில் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

பங்குதந்தை, சின்ன முட்டம்: சின்னமுட்டம் மீன்பிடி கிராமத்தில் இருந்து நாகர்கோவிலுக்கு நேரடி பேருந்து வசதி செய்துதர வேண்டும். சின்ன முட்டம் மீனவ கிரா மத்திற்கு புறவழிச்சாலை அமைக்க வேண்டும். சின்னமுட்டம் மீன் இறங்குதளப் பகுதிகளில் கூடுதல் வசதிகள், சுனாமி குடியிருப்புகள் மற்றும் அரசுத் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட மீனவர்களின் வீடுகளுக்கு தனிப்பட்டா வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை எழுப்பினார்.

குமரிமாவட்ட விசைப்படகு மீன்பிடிப்பவர் நலச் சங்கத்தின் செயலாளர்: குளச்சல் மீன்பிடித்துறைமுக விரிவாக்கப் பணிகளையும், வாணியக்குடி மீனவ கிராமத்தில் மீன்பிடித் துறைமுகப் பணிகளை விரைந்து தொடங்கிட வேண்டும். ஆழ்கடல் மற்றும் பாரம்பர்ய நாட்டுப் படகுகளுக்கு வி.ஹச்.எப், ஏ.ஐ, எஸ் கருவிகள் வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

பாரம்பரிய மீனவர் சங்கத் தலைவர்: ஏவிஎம் கால்வாய் ஆக்கிரமிப்பை அகற்றி, தூர்வார வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

நெய்தல் மக்கள் இயக்கத் தலைவர்: மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகையை 21 ஆயிரமாக உயர்த்த வேண்டும். மீனவ கிராமங்களை தனித்தனி ஊராட்சிகளாக அறிவிக்க வேண்டும். முட்டம் ஆரம்ப சுகாதார மையத்தை உயர்தர அரசு மருத்துவமனையாக மாற்ற வேண்டும். மணக்குடி, இனையம் புத்தன்துறை, குறும்பனை மீனவ கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும், லூர்தம்மாள் சைமன் பிறந்தநாளை அரசு விழாவாக அறிவிப்பது, உலக மீனவர் தினத்தை அரசு விடுமுறையாக அறிவிப்பது ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும்."என்றார். இதேபோல்மீனவப் பிரதிநிதிகள் பல்வேறு கோரிக்கைகளை விடுத்தனர். இந்தக் கோரிக்கைகள் தொடர்பாக திராவிட மாடல் அரசால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து கழக மீனவர் அணி செயலாளரும், தமிழ்நாடு மீனவர் நலவாரியத் தலைவருமான ஜோசப் ஸ்டாலின், அவர்கள் மத்தியில் விளக்கினார்.

தொடர்ந்து இந்நிகழ்வில் அவர் மேலும் பேசியதாவது,

"மீனவர்களுக்கென தனியே நலவாரியத்தைத் தந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். அதிமுக ஆட்சியில் முடங்கிக் கிடந்த இந்த நலவாரியத்திற்கு புத்துயிர் கொடுத்தவர் கழகத் தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்கள். அந்த நலவாரியத்தின் வழியே மீனவர்களின் விபத்து மரணம் தொடங்கி இயற்கை மரணம் வரை பல்வேறுவகைகளில் நிதியுதவிகள் வழங்கப்படுகிறது. நலவாரிய உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு கல்விநிதி, திருமண நிதி உதவி என ஏராளமான திட்டங்கள் உள்ளன. இதில் ஒரு மீனவர்கூட விடுபட்டுவிடக்கூடாது என நலவாரிய உறுப்பினர் சேர்க்கைக்கு தமிழகம் முழுவதும் முகாம்கள் நடத்த கழகத் தலைவர்,. மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்.

அதன்படி,தமிழகம் முழுவதும் 142 முகாம்கள் நடத்தி உறுப்பினர்களை சேர்த்துள்ளோம். அதன் அடுத்த பாய்ச்சலாக மீனவர்களின் கோரிக்கைகளைக் கேட்டு அவற்றை நிறைவேற்றி வருகிறோம். மீனவர்களின் கோரிக்கைகளை கேட்டு நிறை வேற்றும் நல்லாட்சியாக திராவிட மாடல் அரசு உள்ளது. மீனவ சொந்தங்களின் கோரிக்கைகளை எப்போதும் அதிக அக்கறையுடன் கவனத்தில் கொண்டு முதல்வர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்.

திராவிட மாடல் நல்லாட்சியில், மீனவர்களின் வாழ்வில் பல நல்லதிட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. மீன்பிடித்தடைக்கால நிவாரணத் தொகையை உயர்த்தியது கழக ஆட்சிதான்! கழகத் தலைவரின் பொற்கால ஆட்சியில் குமரி மாவட்டத்தில் மீன்வளத்துறைக்கு 1000 கோடி ரூபாய்க்கும் அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டு திட்டங்களாக வந்துள்ளன. இப்போதும்கூட உங்களிடம் பிற கோரிக்கைகளையும் கேட்டு, நிறைவேற்ற ஏதுவாகவே முதல்வர் இந்தப் பணிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மீனவ கிராமங்களை பிரித்து தனித்தனி ஊராட்சியாக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளீர்கள். உள்ளாட்சி தேர்தலுக்கு முன்பு இது செய்யப்படும். கடியப்பட்டிணம் மீனவ கிராமத்தில் தூண்டில்வளைவு பணி விரைவில் முடிக்கப்படும்.என்றார். தொடர்ந்து மீனவர்களின் பிறகோரிக்கைகளுக்கும் துரித நடவடிக்கை எடுக்க அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார்.

மேலும் இந்த நிகழ்ச்சியில் கடலோர அமைதி மற்றும் வளர்ச்சி இயக்குனர் டன்ஸ்டன், கன்னியாகுமரி பங்கு தந்தை உபால்டு, முட்டம் பங்கு தந்தை டாபின், கடியபட்டணம் பங்குதந்தை ஆன்ட்ரூஸ், சின்னமுட்டம் பங்கு தந்தை மேக்சன் , பாரம்பரிய மீனவர் சங்க தலைவர எஸ்.ஏ.மகேஷ், குமரி மாவட்ட விசைப்படகு சங்க செயலாளர் கேப்டன் ஜான்சன், முட்டம் விசைப்படகு சங்க செயலாளர் புரூஸ், முன்னாள் மாவட்ட பஞ்சாயத்து கவுன்சிலர் சசியோன் , நெய்தல் மக்கள் இயக்க தலைவர் குறும்பனை பெர்லின் , குமரி கிழக்கு மாவட்ட திமுக மீனவரணி அமைப்பாளர் அனனியாஸ், முன்னாள் மிடாலம் ஊர் தலைவர் சிபில் ஆகியோரும் கலந்து கொண்டனர்.